தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 3, செவ்வாய்க்கிழமை.

மாசி 19, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண் ''.

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய மக்களுக்கு கூட்டுக்குடிநீர் திட்டம்.

21—*(வினா எண். 6464) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தொண்டியகாடு, முனங்காடு, புதுக்குடி, மேலக்காடு, மேலத்தொண்டியகாடு கூட்டுக்குடிநீர் திட்டத்தில் கற்பகநாதர் குளம் பஞ்சாயத்தில் கேணிவெட்டி மோட்டார் பொருத்தி சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் பைப் லைன் போட்டும் மேல்நிலைத் தொட்டி கட்டியும் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்க வில்லை என்று அரசுக்குக் கோரிக்கை மனு வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டியக்காடு பகுதி கடற்கரைக்கு அருகில் உள்ள இடம். கற்பகநாதர்குளம் பஞ்சாயத்தில் பெரிய கேணி ஒன்று வெட்டப்பட்டு, அதிலிருந்து பைப் லைன் தொண்டியக்காடு வரையில் இணைக்கப்பட்டும் செயல்படாமல் நின்றுவிட்டது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அதுபற்றி கேட்டபோது அதிகாரிகள் தண்ணீர் சப்ளை செய்வதாகச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடமில்லை என்று எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்தக் கேள்விக்குப் பிறகாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்பி, தொண்டியக்காடு பகுதியில் இருக்கிற ஊர்களுக்குத் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூனங்காடு, புதுக்குடி, மேலக்காடு ஆகிய மூன்று கிராமங்களுக்கும் நல்ல தண்ணீர் வழங்க 5 மீட்டர் விட்டம் உடைய கிணறு வெட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி, எல்லாவற்றையும் செய்ய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 4,999 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, அந்தக் கிணறு வெட்டப்பட்டு, பைப் லைன் இணைக்கப்பட்டு, தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வந்தது. பைப் லைன் பிளாஸ்டிக்கில் போடப்பட்டிருந்ததால்-சுமார் 7 கிலோ மீட்டர் தூரம்—இடையிலே எலி கடித்து, துண்டு துண்டாகிவிட்ட காரணத்தினால் தண்ணீர் செல்வது நின்றுவிட்டது. ஆகையால் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய தகவல்படி தண்ணீர் இல்லை என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு, இடையில் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இரும்பு பைப்புகள் போட்டு, தொடர்ந்து தண்ணீர் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஏதாவது பிரச்சனைகள் வருவதாக இருந்தாலும் பராமரிப்பிற்காக 17,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ரிப்பேர் செய்து, ஒழுங்காக தண்ணீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.